1993 ஏப்ரல் 16]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர். இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி போலீஸ் நிலையம் அருகில் இலங்கைப் போராளி ஒருவர் (குறுக்கீடு)

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்பு தீர்மானம் பற்றி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். இன்னொரு பிரச்சினையை எடுக்க இருக்கிறேன் (குறுக்கீடு). நான் அனுமதி மறுத்ததற்குப் பிறகு இங்கே வந்து எழுப்ப முற்படுவது சரியல்ல. திரு. ரங்கநாதன் உட்கார வேண்டும். இது முறையல்ல. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததற்குப் பிறகு பேசுவது முறையல்ல. திரு. ரங்கநாதன் இது முறையல்ல. உட்கார வேண்டும். (குறுக்கீடு) இது முறையல்ல. நான் உங்களுக்கு என்னுடைய அறையிலே அனுமதி மறுத்தும், அதற்குப் பிறகு உங்களுக்கு எழுத்து மூலம் கொடுத்ததற்குப் பிறகும் அதை இப்படி எழுப்ப முற்படுவது சரியல்ல. (குறுக்கீடு) திரு. ரங்கநாதன் உட்கார வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாகத் தமிழகத்திலே பரவலாக விடுதலைப் புலிகள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர், இது முறையல்ல. நான் அவர்களுக்கு அனுமதி மறுத்திருக்கிறேன், அனுமதி மறுத்ததற்குப் பிறகு நீங்கள் அதே பிரச்சினையை– கடந்த சில நாட்களாக விடுதலைப் புலிகள் மிகுந்து இருக்கின்றார்கள்– என்று பேச முற்படுவது சரியல்ல. (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை- அனுமதிக்காத பிரச்சினையை எப்படி எழுப்பலாம் என்பதை நீங்கள்தான் விளக்க வேண்டும். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்து, அவர்களுக்கே நான் அது பற்றி விளக்கம் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய கவனத்திற்குக்கொண்டு வந்தார்கள், அதற்கு நான் அனுமதி மறுத்து அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததைப் ற்றி அதற்குப் பிறகு விளக்கம் கொடுக்கிறேன் என்று சொல்வது (குறுக்கீடு) சரியல்ல. நான் அனுமதி மறுத்த

தற்குப் பிறகு பேச வேண்டாம். ஊகத்தின் அடிப்படையில் ஒன்றைக் கொடுத்திருப்பது பற்றி சொல்லி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூகத்தின் அடிப்படையில் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி இல்லையென்றால் ஆதாரம் இருக்கிறது என்று என்னிடத்திலே வந்து கொடுப்பார்களேயானால் நாளை எடுத்துக் கொள்வது பற்றிப் பரிசீலிக்கிறேன் (குறுக்கீடு). நீங்கள் ஊகத்தின் அடிப்படையில் ஒரு பிரச்சினையைக் கொடுத்து, அதை விதி 56-ன் கீழ் எழுப்ப வேண்டும் என்று கேட்கிறபோது, நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அப்படி மறுத்த பிரச்சினையை இங்கே வந்து எழுப்ப வேண்டும் என்று முற்படும்போது இதை எழுப்ப இயலாது என்பதையும் நான் தெரிவிக்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : விதி–56–ன் கீழ் அனுமதிக்காவிட்டாலும், ஸ்பெஷல் மென்ஷனாக அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத்தான் நான் சொன்னேன். அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறது என்றால் என்னிடத்திலே கொடுங்கள் என்று கேட்டிருக்கிறேன். அதைக் கொடுப்பார்களேயானால் நீங்கள் தெரிவிப்பதைப் போல வேறு வகையிலாவது இங்கே எழுப்புவதற்கு பின்னர் அனுமதிக்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச வேண்டாம் என்றுதான் நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) தயவுசெய்து நான் அனுமதி மறுத்ததற்குப் பிறகு இதிலே பேச வேண்டாம் (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு முக்கியமான பிரச்சினையை நான் எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை. அதுபற்றி எனக்கு ஆதாரம் இருந்து கொடுப்பீர்களேயானால் நாளை எடுத்துக் கொள்வதுபற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. யூகத்தின் அடிப்படையில் ஒன்றைக் கொடுத்து, நான் பேரவையிலே எழுப்ப

தகவல் கோரல்

வேண்டும் என்று சொல்வதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடு) தயவுசெய்து வேண்டாம், அடுத்த பிரச்சினைக்குச் செல்லலாம், உட்காருங்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. யூகத்தின் அடிப்படையில் அல்ல. இது முக்கியமான பிரச்சினை. பாதுகாப்புப் பற்றிய பிரச்சினை. இன்னும் சொல்லப் போனால்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொன்னேன். அதுபற்றி முழுமையாக விளக்கங்களோடு தகவல் கொடுப்பார்களேயானால் நாளை எடுத்துக் கொள்வது பற்றிப் பரிசீலிக்கிறேன் என்பதை நான் தெரிவித்து இருக்கிறேன். அதையே இப்போதும் தெரிவிக்கிறேன்.

3. சிறப்பு கவன ஈர்ப்பு

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி போலீஸ் நிலையம் அருகில் இலங்கைப் போராளி தப்பிக்க முயன்றபோது சுடப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி போலீஸ் நிலையம் அருகில் இலங்கைப் போராளி தப்பிக்க முயலும்போது சுடப்பட்ட நிலைதனைக் குறித்துப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. வி. தண்டாயுதபாணி, திரு எஸ். எஸ். ராமசுப்பு, திரு. வ. சத்தியமூர்த்தி ஆகியோர் என்னிடத்திலே ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நேரத்திலே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வராது. (குறுக்கீடு). உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின் எப்போது வரும் சார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போது வரும் என்பதைப் பற்றி என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். (குறுக்கீடு) இப்போது, பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள். திரு. வி. தண்டாயுதபாணி, கமுதி பிரச்சினை பற்றி நீங்கள் விளக்கம் கோரலாம். (கூச்சல்-குழப்பம்).